சுத்தச் சுடர்மணி க.

ஓம் சுத்தசக்தி.

# அருட் செல்வம்.

(சிவசிந்தையுடன்)

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது.

சுத்த நிலயம்

நச்சாந்துபட்டி.

உரிமை பதிப்புற்றது. 1938.

All rights reserved by

THE SHUDDHA NILAYAM

Nachandupatti and

THE ANBU NILAYAM,

Ramachandrapuram,

Pudukotah State.



அன்பின் வடிவேயாம் ஆண்மா—அதுகாட்டின்
வன்பகையும் நட்பாய் வரும்.

# பதிப்புரை.

வீரத்தமிழீர்

இறைவன் திருவருளால் எழுது சுத்த நிலயத்தின் முதல் மணியாகிய "அருட்செல்வம்" எனும் இக்குறுஞ் சுவடியை தண்டமிழ்த்தாயின் தாள்களில் வைத்து வணங்குகிறோம். இதை யாத்துதவிய தவப்பெரியார் சுவாமி சுத்தானந்த பாரதியாரைத் தெரியாத தமிழர் இலர். இவர் இதயம் ஒரு தெள்ளிய நறுமணத் தமிழ் மலர்க்கா; இந்தக் காவில் அலர்ந்த தமிழ் மலர்களின் மணத்தை, அன்புநிலயத் தென்றல் மூலம் தமிழகம் நுகர்ந்து வருகிற தென்பது தெளிவு. சுவாமிஜீயின் உள்ளச் சோலையில் செழித்திலங்கும் பலநிற மலர்ச் செடிகளில் ஒன்றாகிய சன்மார்க்க மென்னும் செடியில் பூத்த மலர்களில் ஒன்றுதான் இஃது. இதேபோல் அளப்பரிய மலர்களை அள்ளி வந்து தமிழகத்தார்க்குத் தரவே, எழுது நிலயம் தோன்றியுள்ளது.

இப்பணிக்குத் தமிழன்பர்கள்போதிய ஆதரவு தந்துஎம்மைத் தூண்டுவார்ளாயின் புதுப்புதுத்தமிழ் மணத்தைக் காலா காலத்தில் நுகர்ந்தின்புறலாம். இந்நூலில் இயங்கும் ஒவ்வொரு உண்மையான ஆழ்ந்த கருத்துக்களையும், அன்பர்கள் ஊன்றிப் படித்து, படித்ததோடுநில்லாமல் இயன்றளவேனும் வாழ்வில் அமைத்துப்பயன்பெறவேண்டுமென்பதே எழுது விருப்பம்.

எமது வெளியீடுகளுக்கு மனமுவந்த ஆசிகூறி, சிறப்புரை நல்கிய புதுக்கோட்டை அரசர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு V. T. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களுக்கு எமது மெய்யன்பையும் நன்றியையும், வணக்கத்தையும் செலுத்துகிறோம்.

இந்நூலை மிகச் சுருங்கிய கால அளவில் அச்சிட்டுத் தந்து, எமதுவெளியீடுகளில் பிரேமையும் கருத்தும் காட்டும் புதுக்கோட்டை 'கமலா' அச்சகத்தார்க்கு எமதுஅன்பு கனிந்த நன்றி எஞ்ஞான்று முரித்து.

ராம. இராகவன்,
"சுத்த நிலய" அமைச்சன்

நச்சாந்துபட்டி
1938

# சிறப்புரை.

இந்நாலின் பெயர் 'அருட்செல்வம்' செல்வம் வேண்டாம் என்று கூறுபவர் ஒருவரும் இலர். முயற்சி உடையோரே திருவினை அடைவர். இவ்வாறு செல்வம் எய்துவார் ஒரு சிலரே யாவர். அச்செல்வம், உலகச்செல்வம், உயிர்ச் செல்வம் என இருவகைத்தாகும். உலகச்செல்வம் கல்விச்செல்வமும், பொருட்செல்வமும் ஆகும். இவ்விரண்டு செல்வமும் பெறுதார் உலக இன்பங் களை ஒரு சிறுதும்பெற வழியில்லை; மேலும் பிறந் தும் பிறவாதவராவர். உயிர்ச்செல்வம் அன்பும் அருளும் ஆகும். அன்பாவது வாழ்க்கைத்துணைவி, புதல்வர் முதலிய தொடர்புடையார்கண் காதல்உடைய தன்மை. இல்லறம் இனிது நடை பெற வேண்டின் அன்புடைமை இன்றியமை யாதது. அன்பில்வழி, அறவோர்க்கு அளித்தலும், அந்தணரோம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், விருந்தெதிர் கோடலும் இழக்கநேரும். உயிர், உடலோடு இயைந்திருக்கும் சேர்க்கை, அன்பி னாலேயே இணைக்கப்பட்டிருக்கிறது என்பது ஆன்றோர் அபிப்பிராயம். இவ்வுலகவாழ்க்கை யில் இன்பம் அடைவார், யாரெனின் அன்புடை யவரேயாவர். தவத்தால் துன்பமுற்று எய்தும் சொர்க்க இன்பத்தை, இவ்வுலகத்தும் இன்ப முறறுத் துறக்கத்தும் இன்பத்தை எய்தச்செய்

தல் அன்பினுனன்றி வேறொன்ருல் முடியாது. இது திண்ணம். உயிர் நின்ற உடம்பு என்று கூறப்படுவது யாதெனின், அன்புநின்ற உடம்பே ஆகும். மற்றைய உடல்கள் என்புந் தோலும் போர்த்த உடலாகுமே ஒழிய உயிர் நின்ற உடல் என்று கூறவொண்ணுது. மானிடர்க்கு அவசியமான செல்வம் அன்புச்செல்வம். முதற்படியில் இது சிறந்ததாகும்.

அடுத்தபடியான முன்னேற்றம் அருட்செல்வம் பெறுதலேயாகும். அன்பின் பயன் அருள் பெறுதல். 'அருள்' என்னும் அன்பீன் குழவி' என்ருர் திருவள்ளுவர். தொடர்பு பற்ருது எல்லா உயிர்களின் மேலும் செலுத்தும் அன்பிற்கே 'அருள்' என்னும் திருநாமம் அமைந்துள்ளது. அருளாகிய செல்வமே செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வம். பொருட்செல்வம் இழிந்தவரிடத்தும் நிலேத்திருப்பதை நாம் பார்க்கிருேம். அருட்செல்வம் உடையவர் உயர்ந்தவர். உயர்ந்தார்கண்ணே அல்லது வேருருவரிடத்து இல்லாத அருட்செல்வமே சிறந்த செல்வம். ஏனே நீசர்கண்ணும் உளவாம் பொருட் செல்வம் முதலிய செல்வங்கள் சிறப்பில்லாதனவாம் என்பது பெரியோர் கருத்து. அருள் பெற்ற

நெஞ்சத்தை உடையவர்க்கே முத்தி எளிதாகும். அருளிலா நெஞ்சத்தாருக்கு இருள்நிறைந்த துன்ப உலகமாகிய நரகம் புகல் தவறாது. அருளாள்வார்க்கு அல்லலே சேர்வது இல்லை. அல்லல் இல்லாமைக்குக் காற்றியங்குகின்ற பெரிய ஞாலமே சான்றாகும். பிற உயிர்களைப் பேணி அவ்வுயிர்களிடத்து என்றும் அருளுடையார்க்கு தன்னுயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள் எப்பொழுதும் நேரவே நேராது. அவர்மறுமைக்கண் நரகம் புகவே மாட்டார். அருள் என்னும் குணத்திற்கு ஆளாகாது வாழ்வாரை, முன்புத்தியும் எதிர்நோக்கும் இல்லாதவர் என்று ஆன்றோர் கூறுவர். எல்லா உயிர்கள்மீதும் அருள் கொண்டவரே வீட்டுலகத்து இன்பத்தை அடைவர். அருள் இல்லாதவர் வீட்டுலகத்தை எட்டிப்பார்க்கும் பேறற்றவர் ஆவர். கல்விப் பொருளும் செல்வப்பொருளும் இல்லாதவர் இம்மையில் இவ்வுலகத்தின்பம் எய்துவது எவ்வாறு முயற்கொம்போ அவ்வாறே அருள் இல்லாதவர் மறுமையிலும் வீட்டை எய்தும் நல்லூழைப் பெறுவது குதிரைக்கொம்பாகும்.

அருளற்றவன் செய்யும் நற்கருமங்கள், அறிவிலி மெய்ப் பொருளை உணர்ந்தாற் போலும்

வேஷமாகவும், பயனிலவாகவும் அமையும். அருளே முதன்மையாகக் கொண்டு மற்றைய அறங்களே இயற்றுவார் அறப்பயனே முற்றிலும் பெறும் ஆற்றல் படைப்பர். ஆதலின் மக்களாகப் பிறந்த அனைவரும் அன்பையும் அருளேயும் வளர்க்க பல்லாற்ருலும் முயற்சி செய்வது உத்த மோத்தமம்.

யாவரும் பிறமக்களேச் சார்ந்து நிற்கவே முயற்சிக்கிருர்கள். ஜனங்களேச் சார்ந்து நிற்பது பெரிய காரிய மில்லே. சத்தியத்தையும் அருளே யும் கடைப்பிடிப்பதுதான் பெரியகாரியம். சத்தியத்தையும் அஹிம்சையையும் பின்பற்றுகையில் தனித்து நிற்கவும் நேரிடக் கூடும். பிறரது தூஷணைகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் ஆளாக வேண்டியும் இருக்கலாம். ஆனுலும் பேரின்பத்தையும், நித்தியத்தையும் அளிக்கக் கூடிய சத்தியத்தையும், அருளேயும் கைவிடக் கூடாது. உலகில் சத்தியத்தையும், அஹிம்சையை யும் காட்டிலும் உயர்ந்தது வேருென்றும் இல்லே. இவ்விரண்டு தர்மங்களில் சத்தியத்தைக் காட்டி லும் அஹிம்சையே சிறந்ததாகும். "ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று" என்று திருவள்ளுவர்

அருளிச்செய்கிறார். நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னோடு இணையொப்பதின்றித் தானே யாக நல்லது அஹிம்சை என்னும் அருட்குணம். அருளே, எல்லாத் தருமங்களிலும் முதலிடம் பெறத் தக்கது என்பது திருவள்ளுவர் மதம்.

உடலுக்குப் பசிஏற்படுவது நமக்குத்தெரிகின்றது. நன்றாகப் பசித்தவுடன் பசியைத் தீர்க்க உணவு முதலியவற்றை உபயோகித்துப் பசியைத் தணிக்கின்றோம். இது காரணத்தால் உடலுக்கு 'உணவின் பிண்டம்' என்று பெயர் உண்டு. "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்பது பெரியோர் வாக்கு. இம்மாதிரி மனத்திற்கும் பசி உண்டு. மனத்தின் பசியை அரசியல் முன்னேற்றத்தாலும், பொருளாதார முன்னேற்றத்தாலும் நிவர்த்திசெய்ய முடியாது. உலகாயத விஷயங்களால் மனப்பசி மாறாது. அருளும் சத்தியமுமே மனப்பசியை மாற்றக்கூடிய சிறந்த உணவாகும். இத்தருமங்களை மனது மேற்கொள்வதாலேயே மனதுக்குச் சாந்தி பிறக்கிறது. அன்பும், அருளும், சத்தியமும் யாவருடைய மனத்திலும் பரவ இந்நாட்டில் தர்மப் புரட்சி தோன்றவேண்டும். இம்மூன்றையும் பரப்புவதே உயர்ந்த மதமாகும். மனித சமூகத்தின் ஆத்ம ஞானத்தை

விருத்தி செய்வதும், சமூகத்தில் நல்லொழுக்கத்தை நிலவச் செய்வதுமே ஒவ்வொரு மதத்தினுடைய உயர்ந்த நோக்கமாகும். இம்மாதிரி மதப் புரட்சியை ஏற்படுத்த 'அருட்செல்வம்' என்னும் நூல் தூண்டுகோலாயிருக்கும் என்பது எனது தீர்மானம்.

அருட் செல்வத்தை வளர்த்தற்குரிய பல உபாயங்களையும், ஒவ்வொரு உயிரும் அருட்செல்வத்தைப் பெறவேண்டும் என்பதன் அவசியத்தையும் இந்நூல் நன்கு எடுத்து விளக்குகிறது. இவ்வரிய நூலை இயற்றிய பேராசிரியர், சுவாமி சுத்தாநந்த பாரதியார் ஆவார். இந்த சுவாமிகள் புதுச்சேரியில் அரவிந்த ஆச்சிரமத்தில் தவம் புரிந்து வருகின்றார். பல ஆண்டுகளாகச் செந்தமிழுக்குச் சுவாமிகள் புரிந்து வரும் பணிகள் பல. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதே சுவாமிகளின் திருவுள்ளம். இருந்த இடத்திலிருந்தே தமிழ் நாடுமுழுவதும் செந்தமிழ் மணம் வீசும்படி செய்யுள் வடிவிலும், வசனவடிவிலும் பல காப்பிய மலர்களைப் பெருக்கி விளங்குகிறார், புதுக்கோட்டையில் வெளியாகும் ஜனமித்திரன் பத்திரிகையில் வாரந்தோறும் தவறாமல் சுவாமிகளின் நூல்கள் மலர்ந்துகொண்டேயிருக்

கின்றன. தமிழ் நாட்டில் விளங்கும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எல்லாம் தவறாமல் விஷய தானம் செய்து தமிழ்மொழிக்கும், தமிழ்க்கலைக்கும் புத்துயிர் அளித்து வருகின்றார். நவரசங்களும் ததும்பும் நாடக நூல்களும், மனப்பசியை மாற்றும் தத்துவ நூல்களும், நன்னெறியில் நிறுத்தும் நீதி நூல்களும், துன்பத்தை நீக்கி இன்பத்தையளிக்கும் பல காவிய நூல்களும் பெரிய தொழிற்சாலையினின்று வெளிவரும் பொருள்களே போன்று சுவாமிகள் அருள்வாக்கினின்று பூத்துக் கொண்டேயிருக்கின்றன. தன்னலம் பேணாது, கைம்மாறு கருதாது தமிழ்ப்பணி பூண்ட பேரறிஞராகிய சுவாமிகளின் புத்தப் புதிய நூல்கள் தமிழ் மக்களுக்குப் பெருவிருந்தளிக்கின்றன. தனக்கென்ன வாழாது பிறர்க்கெனவாழும் தவம் புரிந்த தவமாகும் சுவாமிகட்குத் தமிழ் நாடு இயற்றும் கைம்மாறும் உண்டோ? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என்னாற்றுங் கொல்லோ உலகு, என்னும் திருவள்ளுவர் திருவாக்கிற்கு இலக்கியமாய் விளங்குகின்றார் சுவாமி சுத்தானந்த பாரதியார்

பாரதியார் இயற்றியருளிய நூல்களைப் புத்தகவடிவிற் பதித்து வெளியிட்டு உதவி வரு

கின்ற அன்பர் பலர் உண்டு. அன்பு நிலயத்தார் சுவாமிகளின் பல நூல்களைப் புத்தகவடிவில் பலர்க்கும்பயன்படும்படி பொருட்செலவு செய்து பதிப்பித்துத் தமிழ்அன்பர்பலரும் பயனுறும்படிசெய்து வரும் ஊழியம் தமிழ்நாடு அறிந்ததேயாகும்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த நச்சாந்துபட்டியில் 'சுத்த நிலயம்' என்ற ஒரு கழகம் நிறுவப் பெற்றிருக்கிறது. இக்கழகத்தின் அமைச்சர் ராம. ராகவன் என்னும் தமிழ்த்தொண்டர். இக்கழகத்தார் சுவாமிகளின் அரிய நூல்களை வெளியிடும் திருப்பணியை மேற்கொண்டுள்ளார். அதன் முதல் மலரே இந்த "அருட்செல்வம்" சுத்த நிலயத்தாரின் பொருளுதவியால் இந்நூல் வெளிவருகின்றது. பணமும் பணமுடையார்க்கேயாகும், தவமும் தவமுடையார்கேயாகும். அறிவும் அறிவுடையார்க்கேயாகும். என்பது பழமொழி. அருட்செல்வத்தை யாவர்க்கும் வழங்க முன்வந்த சுத்தநிலயத்தார் மேலும் மேலும் பல தமிழ்ச் செல்வ நூல்களைத் தமிழகத்துக்கு வழங்கித் தமிழ்ப்பணி செய்து வரும்படி திருவருள் பாலிக்க எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுகின்றேன். சுத்த நிலயத்தார் வெளியிடும் சுவாமிகளின் நூல்

களை யாவரும் வாங்கிப் படித்துப் பயனடையும் படி அன்பும் அறிவும் மலர்ந்துள்ள தமிழகத்தாரையும் வேண்டுகிறேன். தமிழும், தமிழ்ப்பணியும், தமிழ் மக்களும் ஓங்குக!

பண்டித,

புதுக்கோட்டை 1938.

வி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்
தலைமைத் தமிழாசிரியர்
மன்னர்பிரான் கல்லூரி.

ஓம் சுத்த சக்தி.

# 1. உயிர்க்கிளி.

நமது உடல் பஞ்சபூதக் கூண்டு; அதில் ஒரு உயிர்க்கிளியுள்ளது; அது எப்போதும் இன்பப்பசியெடுத்துக் கூவுகிறது; சோறுதருகிறோம்; கனிதருகிறோம்; தண்ணீர்தருகிறோம்; படுக்கமெத்தைதருகிறோம்; காதுக்கினிமையாகப் பாட்டுப்பாடுகிறோம்; கண்ணுக் கினிமையான காட்சிகளைக் காட்டுகிறோம். அணிகள்பூட்டி உடலை அழகு செய்கிறோம்; ஐம்புலன்களால் நுகரக்கூடிய சுக போகங்களை யெல்லாந் தருகிறோம். இவற்றை யெல்லாம் அனுபவித்து, மீண்டும் அக்கிளி "பசி! பசி! இன்பப்பசி!" என்று முறையிடுகிறது அவரவர் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்; ஏதாவது ஒரு மனக்குறை யிருக்கும். அது தீர்ந்ததும், இன்னொரு மனக்குறை வந்து முளைக்கும்; அதானதும் மற்றொன்று மேகப் படலம் மாதிரி வந்து அமைதியைமூடும். அன்னவிசாரம் அதுவே விசாரம்; அது வொழிந்தால் சொன்ன விசாரம்; தொலையா விசாரம்; அதுவும் ஒழிந்தால் சிற்றின்ப விசாரம்; அதுவும் ஒருவாறு தீர்ந்தால், பிள்ளைக்கவலை; அதுவும் தீர்ந்து நான்குபிள்ளை குட்டிகள் உண்டானால் மனக்

கவலை, தொழிற்கவலை; தினம் முதலாளிக்குப் பதில் சொல்லி யாகவேண்டும்; என்ன செய்தாவது மனைவிமக்களைக் காப்பாற்றவேண்டும். அதற்கு மேல் உடம்பு சரியாயில்லை, நோய், படுக்கை, வைத்தியம்; அது தீர்ந்தால், வீட்டில் சண்டை, அவளுக்கும் எனக்கும், அவனுக்கும் எனக்கும் ஆகாது. மனம் யார்மேலாவது பாய்ந்துகொண் டேயிருக்கிறது. 'அடுத்த வீட்டுக்காரன் மோட் டாரில் போகிறானே நமது தலையில் எழுதியது கால்நடைதானா' என்ற பொறாமை கிளம்பு கிறது. இந்த மாதிரியே தொட்டில்முதல் கட்டை வரையில் மனிதன் ஏதாவது கவலை பற்றி, நெஞ்சம் நைந்து, அமைதியிழந்து, தூண்டிற் புழுப்போல் வாழுகிறான். இத்தனை கவலைப்புயல்களோடும் உயிர்க் கிளி ஓயாது, "இன்பம், இன்பம்" என்று முறை யிட்டுக்கொண்டே இருக்கிறது. நேற்று நுகர்ந் தது இன்று சலித்துப்போகிறது. நாளை மனம் மற்றோரின்பந் தேடுகிறது. இவ்வாறு மனித வாழ்க்கை இடர்ப்படுவானேன்?

## 2. அருள் விளக்கு.

நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். அகண்ட வாழ்வுக்கடலில் நமது யாக்கை ஒரு சிறு தோணி போலேமிதக்கிறது. நாம் துடுப்பைத் தவறவிட்டுக்

கவலைப் புயலில் தவிக்கின்றோம். துடுப்பு எது? அதுவே திருவருள்.

அன்பர்களே! அருள், பொருள் இரண்டும் வாழ்விற்கு இன்றியமையாத சாதனங்கள். அருளில்லாப்பொருள் துடுப்பில்லாக் கலம் போலும். அருளும் பொருளும் உயிரும் உயிர்ப்பும் போலும். ஒரு அறையில் தங்கமும், வெள்ளியும் குவிந்துள்ளன; நமக்கும் கண்ணுள்ளது; ஆனால் அறையில் ஒளியில்லை; எல்லாம் இருளாயிருக்கிறது; நாம் தடவித்தடவிச்செல்கிறோம்; நாம் விரும்பிய பொன் வெள்ளிச் சாமான்களில் தடுக்கி விழுந்து காயப்பட்டுத் துன்புறுகிறோம். இது மாதிரி இருக்கிறது நமது உலகவாழ்க்கை; ஒரு அருள் விளக்கு இருந்தால் இவ்வாழ்வின் வழியில் இடரில்லாமல் செல்லலாம். வேண்டிய பொருளை எய்தலாம். அந்த அருள் விளக்கில்லாமலே உலகோர் கண்ணிருந்தும் வழிதடவித் தள்ளாடுகின்றனர்.

## 3. பொருளுலகம்

இந்த அருட்செல்வம் இல்லாமலேதான் உலகம் இன்று போர், போட்டி, பொறாமைக் காடாகி இரத்தவெள்ளம் பெருக்குகிறது. மனிதன் மதியூகத்தால், பௌதிக சக்திகளை வெல்லு

கிறான்! ஆகாயத்தில் பறக்கிறான். ரேடியோ அற்புதங்கள் செய்கிறான். இயந்திர விசித்திரங்கள் காட்டுகிறான். மனிதன் கண்டுபிடித்த வியன்பொறிகள் எல்லாம் போர்க்களத்தில் மூட்டி மனிதரையே கொன்றுகுவிக்கின்றன. 8000 அடி உயரம் ஆகாயக்கப்பல் பறப்பது ஆச்சரியமே! "ஆ ஆ!" என்று நாம் அண்ணாந்து பார்க்கிறோம். அப்பொழுது "டபார்" என்றொரு குண்டு வந்து விழுகிறது! அது நம்மைத் துருவியெறிகிறது; நமது ஊரைத் தகர்த்துத் தூளாக்கி விடுகிறது! யந்திரநாகரிகம் யந்திரம்போலவே இரக்கமில்லாது கொலை புரிகிறது. மனித மூளையின் பௌதிக விசித்திரங்களெல்லாம் டம்டமார் குண்டாகவும், விஷப்புகையாகவும் உருவெடுத்து நிற்கின்றன. யந்திரப்பொருள்கள் ஏழைநாடுகளைச் சந்தையாக்கிக் கசக்கிப் பிழிகின்றன. அதனால் உலகம் ஒருபுறம் முதலாளி ராஜ்யமாயிருக்கிறது; மற்றொருபுறம் பஞ்சைகளின் வனாந்தரமாயிருக்கிறது.

## 4. கொலைப்பழி.

இங்கிலே என்? உதாரணமாக, ஹிட்லர் முஸோலினி, மிகாடோ போன்றோருக்கு ஏராளமான பொன்னும் பொருளும், பூமியும், சுகபோகங்களும் இருக்கின்றனவே, அவற்றைக்

கொண்டு தாமும் அமைதியாக வாழ்ந்து, உலகிலும், அறிவையும், தொழிலையும், அறத்தையும், பரப்பி நலம்புரியலாகாதோ? ஏராளமான கொலைக் கருவிகளைச்செய்து குவித்து அபிசீனியா, சைனு, ஸ்பெயின், முதலிய ஏழைநாடுகளை இரத்தகளமாக்குவானேன்? சிறு நாடுகளை மிரட்டிக் கைப்பற்று வானேன். சுற்றிப்பார்த்தால் உலகெங்கும் கொலைக்களமாயிருக்கிறது. பஞ்சமாபாதகங்கள் நித்யகர்மானுஷ்டானங்களாக நடக்கின்றன. வாயில்லாச் சீவர்களுக்கு மனிதன் வயிறு சுடுகாடாயிருக்கிறது! எத்தனை ஆடு, கோழி, மீன், பசு, காளை, புட்கள், விலங்குகள் மனிதன் பெருந்தீனிக்கு ஆளாகின்றன! இக்கொலைப்பாவங்கள் பெருகி, மனிதசமுதாயத்தை அழிக்கின்றன. மனிதன் விலங்கைச் சாப்பிட்டு மனிதவிலங்காகி, மனிதரைப் போர் வெறியால் கொல்லுகிறுன். இப்போது நடக்கும் போர்கள் நீடித்தால், மனிதனை மனிதன் கடித்துண்ணும் நிலைமைகூடவரும். ஆ என்ன பயங்கரமான உலகம்!

## 5. அருளால் அமைதி.

உலகில் பொருள்கள் ஏராளமாயிருக்கின்றன; அதனுல் அமைதிவரக்காணேம்; அமைதி யின்பம்

அருளாலெய்தும். பொருள் வேண்டியதுதான்; "பொருள்இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" ஆனால் பொருள் அருளைச்சார்ந்திருக்கவேண்டும். "அருட்செல்வம் செல்வத்துட்செல்வம்" அருளும் பொருளும் சேர்ந்த பாரதநாடு, புண்யபூமியாக நிலவியது. இன்னும் நமது அருட் செல்வத்தை நாடியே உலகம் இந்நாட்டிற்கு யாத்திரை வருகிறது. அழகு, கலை, தொழில், வாணிபம், செல்வம், பேர், புகழ், அரசியல் இவையெல்லாம் பொருளின்பாற்படும்! இவற்றால் புற இன்பம் சிறிதெய்தலாம். இவற்றையெல்லாம் ஒருங்கே எய்தினும் உள்ளேயிருந்து ஒருமனக்குறை "இன்னும் அமைதியில்லையே! இன்பம் வரவில்லையே!" என்று முறையிட்டுக்கொண்டே யிருக்கும்.

## 6. அருளின்பம்.

அந்த முறையீட்டைத்தீர்க்க உள்ளின்பம் அல்லது அருளின்பம் வேண்டும். புலனடக்கம் சித்தசுத்தி, மனத்தெளிவு, வைராக்கியம், நல்லொழுக்கம், உயிர்க்கருணை, சீலம், அறம், அன்பு, உண்மை, ஒப்புரவு, தெய்வபக்தி, ஆன்மநேயம், தன்னறிவு, யோகசாதனம், கடவுட்கலப்பு இவையெல்லாம் அருட்செல்வமாம். இவற்றால் உண்மையின்பமெய்தும். அரசியல் சமுதாய சுதந்

திரம் மட்டும் ஒரு நாட்டை இன்புறுத்தாது. அருட் செல்வமே ஒரு நாட்டின் பெருமை. ஏசு நாதர் தந்த பைபிள் என்னும் அருட் செல்வத்தைப்பற்றியே கோடானு கோடி கிரிஸ்தவர் ஆறுதல் பெறுகின்றனர். அந்த அருட் செல்வத்தின் அடிப்படைமேல் உலகெங்கும் பாதிரிமார்கள் எத்தனைக்கோயில்கள், மடங்கள், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள் முதலியவற்றை எழுப்பி ஏராளமான பணி செய்கின்றனர்! திருக்குரான் என்னும் அருட் செல்வம் இஸ்லாமிய உலகை ஆளுகிறது! அந்த அருட் செல்வத்தை அடிப்படையாகக்கொண்டே இஸ்லாமிய சாம்ராஜ்யம் தழைத்தோங்குகிறது. புத்த தருமமாகிய அருட் செல்வத்தின் மீது பௌத்த உலகம் செழித்தோங்குகிறது.

## 7. அருட்செல்வம்.

அன்பர்காள்! நமது தீர்க்க தரிசிகள், நமக்களித்த அருட்செல்வம், அளப்பரிது: வேதம், உபநிடதம், பிரமசூத்திரம், கீதை, இராமாயணம், பாரதம், பாகவதம், இவை ஆரிய முனிவர் அளித்த அருட் செல்வங்கள். சிவஞானபோதம், திருமந்திரம், திருவாசகம் தேவாரத்திருமுறைகள், ஔவையார் வாக்கு, பெரியபுராணம்,

தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், அருட்பா, திருப்புகழ், திருக்குறள், கம்பராமாயணம், திருவாய்மொழி, முதலியன செந்தமிழ் முனிவர் நமக்களித்த அருட்செல்வங்கள். இக்காலத்தில் தோன்றி விளங்கும் புதிய அருட்செல்வங்களும் உள்ளன. அருட் சுரங்கத்தில் ஆன்ம நேயத்திற்கும் அமரவாழ்விற்கும், உலக வொற்றுமைக்கும், உண்மை யின்பத்திற்கும், வேண்டிய ஏராளமான செல்வங்கள் மலிந்து கிடக்கின்றன. அவற்றை இனிய எளிய தமிழில் பண்டிதர், பாமரர் அனைவருக்கும் பயன்படுமாறு அள்ளிக்கொடுக்க வேண்டும். அந்த அருட்செல்வத்தைக்கொண்டு மாந்தர் வாழ்வு தூய்மையும், இன்பமும் பொலியவேண்டும். இதன்பால் அன்பர் பணி செய்க !

## 8. வேதாந்தம், சித்தாந்தம்.

அன்பர்களே! நமது நாட்டில் இரண்டு பெரிய சமயதத்துவங்கள் உள்ளன; ஒன்று வேதாந்தம்; மற்றொன்று சித்தாந்தம். இரண்டும் ஜீவஜகபரத்தை ஒப்புகின்றன. வேதாந்தம், இம் மூன்றும் ஒன்றெனும்; சிந்தாந்தம் முப்பொருளும் தனித்தனி யுண்மை யென்னும். உடலிற் புகுந்து போக்கு வரவு செய்யும் ஆன்

மாவைப் பிரமமென்னும் வேதாந்தம். ஆன்மா வைப்பெத்தனுகவும், இறைவனை நித்திய முத்தனு கவும், மதிக்கும் சித்தாந்தம். தன்னையறிந்து தானுக நிற்றலே இன்பமென்னும் வேதாந்தம். தனக்கு மேலுள்ள முதல்வனை இரண்டறக் கலத்தலே இன்பமென்னும் சித்தாந்தம். சமம், தமம், திதிக்ஷை, உபரதி, ஆகிய நான்கு சாதனங் களுடன், ஆத்ம விசாரம் முதிர்ந்து தன்னைத் தானுக உணரவைக்கும் வேதாந்தம். சரியை கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாத னங்களைக்காட்டி அரும்பும், மலரும், காயும் கனியும் போலப் படிப்படியாக ஆன்மாவைப் பக்குவப்படுத்தி, அருட் சக்திபாய்ச்சி, அந்த அருளே தாரகமாகப்பற்றி இறைவனைக்கூட வைககும் சித்தாந்தம். வேதாந்தம் தனக்கு அனியம் இல்லையென்னும். சித்தாந்தம் அனைத்தையும் சிவமயமாகக்காணும். உயிர்களை நடமாடும் கோயில்களாகக் காணும்; பரம் பொருளையே நாடும், கூடும், அவனன்றியாதுமில்லை என்னும்; எல்லாம் அவன் செயல் என்னும்!

"சந்ததமும் எனது செயல் நினது செயல்; யானெனும் தன்மை நினையான்றியில்லாத் தன்மை யால் வேறலேன்; வேதாந்த-சித்தாந்த சமரச சுபாவமிதுவே" என்று தாயுமானவர் இந்த

இரண்டு பெரியதத்துவங்களுக்கும் பாலம்போட்டு வைத்திருக்கிறார். அதனால் வேதாந்த—சித்தாந்தச் சண்டை நமக்கு வேண்டா. வேதாந்தத்திற்கு நமதுநாட்டில் ஏராளமான பிரசாரம் உள்ளது. சங்கரர், விவேகானந்தர், ராமதீர்த்தர், போன்ற ஞானச்சுடர்கள், வேதாந்தக்கதிரை உலகிற் பரப்பியுள்ளனர்.

## 9. சித்தாந்தம்.

ஏழாவது நூற்றாண்டில் சித்தாந்தம் இந்து தருமத்தையே காத்தது. அக்காலம் சித்தாந்தம் வீறுபெற்றெழுந்து பணி செய்திரா விட்டால் வேதாகமங்களெல்லாம் மறைந்து போயிருக்கும்;! "நீரெங்கே? நான் மறைநூலெங்கே? எம்பெருமான் ஐந்தெழுத்தெங்கே?" யென்றநிலைமை யெய்தியிருக்கும். சித்தாந்தமாகிய சுத்தாத்வைத சைவம் நமது நாட்டின் அருட் செல்வத்தைக் காத்தது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், போன்ற ஒப்பற்ற சிவானுபூதிச்செல்வர், நமக்கு அருளொளி துலக்கினர். அவர்களுக்குப்பிறகு நமது தமிழகம் உட்சண்டைகளாலும், அன்னியர் படையெடுப்பாலும், நலிந்தது. நாட்டில் அமைதி குலைந்தது, நாடு போர்க்களமானது. விடிந்தெழுந்

தால், வடக்கிருந்து வரும் பகைவருடன் பொருந்தவே போது சரியாயிருந்தது. நமது இரு கண்ணுகிய தமிழும், சமயமும் மங்கின. ஆறுமுக நாவலரின் அரிய முயற்சிகளால் தமிழும், சைவமும் ஒருவாறு உய்ந்தன என்னலாம். இராமலிங்கசுவாமிகளின் அருட் பாடல்களால் நமது நாட்டின் அருளுணர்ச்சி சிறிது விழித்தெழுந்தது.

## 10. இன்று நிலைமை.

ஆனல் இன்று அருள் விளக்கு மங்கிப் போயிருக்கிறது. ஆங்காங்கு சில அருந்தவப் பெரியார் தவநிலையினின்று அருளுணர்வைத் தூண்டிவருகின்றனர். ஆனல் கோடானுகோடிமக்கள் இன்னும் இருளில் ஆழ்ந்து கிடக்கின்றனர். நாட்டில் நாத்திகம் தலைவிரித்தாடுகிறது. கோயில்கள் இருளடைந்து, வௌவால்களுக்கு உறைவிடமாயின. நமது பெரியார்கள் உபதேசித்த நல்ல பழக்கவொழுக்கங்கள்கூட எள்ளி நகைக்கப்படுகின்றன. "ஆளைப்பாரடா! எருமைக்கிடா மாதிரி! காலையிலே தண்ணீரில் விழுந்து வந்து, சாணத்தைச்சுட்டுப் பூசிக்கொண்டு, உருத்திராட்சப் பூனைமாதிரி உட்கார்ந்திருக்கிறன்" என்று ஆசாரசீலர்களைக் கேலி செய்யும் காலமும் வந்துள்ளது. பள்ளிப்படிப்பில்

நமது சமயஞானக்கலப்பே கிடையாது. பொது ஜனங்களுக்குச் சமயஞானத்தைப் புகட்டத் தொண்டரில்லை. அதனால் நம்மவர் பிறமதம் புகுவதில் வியப்பில்லை. கிறிஸ்தவரைக்கேட்டால் "எமது மதம் கிறிஸ்து மதம், எங்கள் வேதம் பைபிள்" என்பர். "உம்மதம் என்ன? என்றால் உம்மென்றிருக்கும் பலர் நம்மிடையே உள்ளனர். சமய நூற்பெயர் கூட அறியாதவர் இலட்சக்கணக்கா யிருக்கின்றனர்." "கடவுள் உண்டா? ஆணும் பெண்ணும் கூடி உலகம் வளருகிறதே, கடவுள் ஒருவர் எதற்கு? சமய நெறி எதற்கு? அவரவர் இஷ்டம்போலே உண்டு உடுத்து, காதலித்து, பெற்றுப் பெருகி, கற்றுப் பொருள் குவித்து வாழலாகாதா? சமயச் சங்கடம் ஒன்று இடையில் எதற்கு? கண்ணுக்கு மெய்யாகக்காட்டும் பூத, பௌதிக சாத்திரங்கள் இருக்கும்போது, நாம் அரியாத பொருள்களைப்பற்றிப் பேசும் வேதாந்தமும், சித்தாந்தமும், பஞ்சராத்ரமும் எதற்கு? இந்த மதத்தொல்லையே வேண்டா; உலகைப் பொது வுடைமைஆக்கி விடுவோம்.; ஏழை பணக்காரன் என்ற வேறுபாடே இல்லாமற் செய்வோம். எல்லோரும் ஆறுமணி நேரம் உழைத்துச் சாப்பிடும்படி செய்வோம். அது தான் இன்பவழி. சாமி, பூதம், மதம், ஆசாரம்

எல்லாம் ஏமாற்றம்!!" என்று இப்போது மாந்தர் பலர் பேசக் கேட்கிறோம். இந்தப் பேச்செல்லாம் வயிற்றுக்குழியில் போய்முடியும். இவர்களுடைய கிளர்ச்சிகள், முயற்சிகள் எல்லாம் அன்ன விசாரமே!

## 11. அருளுணர்விருந்தால்.

உணவு வேண்டியதுதான்! ஆனால் மனிதன் உண்ணத்தானா பிறந்தான்? பலர் பட்டினி கிடப்பதேன்? மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கத்தாலன்றோ உலகில் வறுமையும் பஞ்சமும் வருகின்றன. மனிதருக்கு அருளுணர்வும், ஜீவகாருண்யமும் இருந்தால் ஒருவரையொருவர் திருடிக் கொடுமை செய்வரோ? அருளுணர்ச்சியுள்ள செல்வன் "எல்லாம் சிவமயம்" என்றறிந்து, உலகைக் கோயிலாக மதித்து, உயிர்களை ஆண்டவன் திருமேனியாகக் கருதித் தன்னால் முடிந்த தருமஞ்செய்து, அறமும், அன்பும் கொண்டுவாழுவான். அருளுணர்ச்சியிருந்தால், மனிதன் மன்னுயிரைத் தன்னுயிர் போல மதிப்பான்; உயிர்க்கொலை செய்யான். ஊனுண்ணான்; தீய உணவுகளைத் தீண்டான். பொய், திருட்டு, விபசாரம், சூது, கட்குடி, வஞ்சம், லஞ்சம், சினம், பொறாமை, கொடுங்

கோல், போர் ஆகிய தீமைகளெல்லாம் அருளுணர்வால் அழியும். அருள் விளக்கத்தால் உலகம் விண்ணரசைப்பெறும். "அருள்" என்பது தெய்வ சக்தி, தெய்வத்தன்மை! அருள் பொழியும் நிலத்தில் அமரானந்தப் பயிர் விளையும்! இராமலிங்கசுவாமிகள் இந்த அருளை விளக்கவே அரியமுயற்சிகளைச் செய்தார். தமிழர் அவரைச் சரியாக அறியவில்லை. அருட்பா முழுதும் அருட்சோதி விளக்கமே, அருள்வாழ்வின் இலக்கணமே.

## 12. சமய ஞானம்.

அன்பர்காள்! நமது தமிழகத்தில் சைவம் வைணவம் ஆகிய இரண்டு முதன்மையான ஆஸ்திக மதங்கள் விளங்குகின்றன. இரண்டு சமயங்களும் இறைவனருளை ஒப்புகின்றன. திருவாய்மொழி, சைவத்திருமுறைகள் இவற்றில் உள்ள அருளறிவைப்பயின்று உலகிற்கும் எளிதாக அளிப்போம். நம்மைச் சுற்றியுள்ள பொது ஜனங்களுக்கெல்லாம் சமயஞானம் புகட்டுவோம். எம்மதத்தினரும் புண்படாத வகையில் நமது சமய போதனையை நடத்துவோம். இலட்சக் கணக்கான பைபிளை அச்சடித்துப்பாதிரிகள் இனமாக வழங்குகின்றனர். அதுபோலே நமது

சமய சாரத்தை எளிய நடையில் எழுதி ஏராள மாக வழங்குவோம். மாதம் ஒரு குறுஞ்சுவடி வெளியிட்டு வழங்கினாற்போதும்.

## 13. சிவமாவதென்ன?

எல்லாவுயிர்களும் இன்பமே நாடுகின்றன. இன்பம் இருக்குமிடத்தையே தேடிப் படிப்படியாக மேலோங்குகின்றன. ஓரறிவுள்ள மரங்கள் பூசாரத்தையுண்டு மலர்ந்து, கனியும் நிழலும் அளித்து, மரபை வித்தினால் வளர்ப்பதால் இன்புறுகின்றன. ஐயறிவுள்ள விலங்குகள், ஐம்பொறி இன்பந்தேடி, உண்டு உறங்கி, கூடி, பெற்று வளர்த்து, மரபைப் பேணுவதில் ஒருவகை இன்பம் அடைகின்றன. மனிதன் புலனின் பத்துடன் மகிழ்வதில்லை. அவனுக்கு அந்தக்கரணம் உள்ளது. மனம் நினைக்கிறது. புத்தி அறிகிறது. சித்தம் எண்ணத்திரைகளை வீசுகிறது. அகங்காரம் "நான்" என்று கிளம்புகிறது. இவற்றால் மனிதன் எத்தனையோ கலைகளையும், இயக்கங்களையும் ஆளுகிறான். ஆனால் கலையுரைத்த கற்பனைகளால் நிலையான இன்பம் வருவதில்லை. அந்தக்கரணங்களைத் தாண்டி ஒரு உள்ளம் உள்ளது. ஏதாயினும் நீண்டஉழைப்பிற்குப் பிறகு இளைப்பாறும் போது, "உஸ் அப்

பாடா! என்று ஒரு வாய்மூச்சு விடுகிறோமல்லவா? அம் மூச்சு நமக்கு ஒரு நொடியின்பம் தருகிறதல்லவா? அதன் வேர் எங்கிருக்கிறதென்று ஆராய்ந்துபாருங்கள். அந்தஇடமே உள்ளம்; அந்தஇடத்திலேதான் ஆன்மா உள்ளது. அதற்குப் பெயர்தான் அந்தராத்மா, இதய புருஷன் என்பர். அதுவே நமது உயிர்வாழ்வை இயக்கும் மின்சாரம் அதுவே வினையுடல் தாங்கிப் போக்குவரவு செய்வது. அது கடவுட் கலப்புள்ளது. தெய்வத்தன்மையுள்ளது. ஆனால் அதுவே கடவுளல்ல. அதனால் நமக்கொரு அமைதியேற்படும். நமது மனம் முதலில் அதில் அடங்கினால், நமது சித்தம் சுத்தமாகி, அதில்லயித்தால், நம்முள் ஒரு சக்திக்கனல் பாயும். அதைச் சிற்கனல், சிற்சக்தி, ப்ரஹ்மாக்னி என்று பலவாறாகச் சொல்லுவர். அதையே முறையாகத் தியானித்து வந்தால் இரண்டு திருவடிகள் உள்ளத்தில் நடமாடுவதே போல் உணர்வோம். ஒரு மின்சார யந்திரம் வேலை செய்யும்போது ‘பட், பட்’ என்று சத்தமிட்டுச் சக்தியைப் பாய்ச்சுகிறதல்லவா? அதுபோலே இதயான்மா சக்திக் கனலைப்பாய்ச்சிப்பரப்பும் அறிகுறியே அந்த இதய நடனம். நீண்ட காலம் அதன் உணர்வில் நிலைக்கும் பெரியார்கள், உச்சியில் குடுமிவைக்கும் இடத்தில்

ஒருபுதிய உணர்வையறிவர். அதற்கும் உள்ளத் திற்கும் ஒரு அமுதநாடி செல்லுகிறது. அதன் வழியாக உணர்வு அல்லது சேதனம், நெற்றிக்கு மேலேறும். அங்கே படிப்படியாக ஓமொலியும், ஒளியும் பர வெளியும் காணும். அந்த அனுப வத்தில், உச்சியில் ஒரு பேரின்பச் சிலிர்ப்புண் டாகும். எல்லையற்ற அமுதக்கடலில் பேச்சு மூச்சின்றி மூழ்கிக் கிடப்பதுபோலே நாம் உணர் வோம். அந்த ஆனந்தம் தவிர வேறொன்றும் தோன்றாது. அந்தப் பரமானந்தமே சிவமாம். 'இன்பமே அன்பே, அறிவே' என்று அனுபூதி பெற்ற மகான்கள் குறிக்கும் பரம்பொருள் சிவம்.

அது சத்து, சித்து, ஆனந்தம், சுத்தம்; அதுவே உண்மை அறிவு, இன்பம், மாசற்ற சுத்தச்சுடராம். அச்சுடரின் அருட் கதிர்களே "சக்தி" யெனப்படும். அந்த அருட்கதிர் விளக் கமே உலகும் உயிரும். சத்தாகிய பரம்பொருள், சித்தாகிய அருளின் மூலம் ஆனந்தமாகவிரிந்து, யாவுமாய் நிற்கிறது. அது சாதிமதபேதங்கடந்த சமயாதீதப் பழம்பொருள். அதையே பலசமயங் கள் பல்வாறு கூறுகின்றன.

தூய்மை, வாய்மை, அன்பு, அருள், சம நோக்கம், நல்லோர்கூட்டம், ஞானவிசாரம்,

குருசேவை, சித்த சுத்தி, மனோஜயம், வணக்கம்! வழிபாடு, ஆர்வம், தியானம் முதலிய சாதனங்களால் அப்பொருளை அனைவரும் தெளியலாம்.

அவரவர் பக்குவத்திற்கும், சித்த விருத்திகளுக்கும் ஏற்றவாறே படிப்படியாக அப்பொருளுண்மை புலனாகும். "சிவம்" என்பது ஒரு சமயச் சார்பான பொருளல்ல. அது அனைவருக்கும் பொதுநிலைப் பொருள். எவரெவர் எப்பெயரால் இறைவனை வணங்கினாலும் இப்பொருளையே வணங்கியதாகும். நாம் உயர்ந்த அத்யாத்ம நிலையில் அடையத்தகும் பேரின்பப்பொருளே சிவம். அதை மனக்கண்ணால் பார்க்க முடியாது. ஆகாசத்தில் சுற்றும் மின்சார சக்தியை நாம் புறவிழிகளால் காணிலோம். அது மின்சாரப் பொறியில் இறங்கி விளக்குகளாகவும், வண்டிகளாகவும், ஒலிப்படங்களாகவும், விரிந்து விளங்கும்போதே அதை நாம் காணவியலும். அதுபோலே, இறைவன் அருள் வாய்மனங்கடந்த நுண்பொருள். சரியை கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்களால், இதயப் பொறியில் இறங்கினால், நமது ஜீவயந்திரத்தின் சூட்சுமத்தைக் காண்போம். பிறகு உலக யந்திரம் யாதால் இயங்குகின்றது என்பதையும் அறிவோம். படிப்படியாக அன்பும்

அறிவும் முதிர்ந்து, நாம்காணும் பொருளுக்கும், நமது கண்ணுக்கெட்டாத பொருட்குழாங்களுக்கும் முதல்வனான நமது உடலில் இடங்கொண்ட பரமனைக் காண்போம், கலப்போம். இது எளிதான காரியமன்று. அவனருளாலே தான் அவனுணர்வுண்டாகும். இறைவன் ஒருவன் உள்ளான் என்ற நம்பிக்கை ஏற்பட்டு உறுதியாவதற்கே பக்குவம் வேண்டும். மனம் பழுக்கவேண்டும். தோத்திரத்தாலும், ஜபத்தாலும், தியானத்தாலும், நல்லோர் கூட்டத்தாலும், அன்பாலும் இப்பக்குவம் எய்தும்.

மாந்தருக்குக் காலை முதல் கண்மூடுமட்டும் ஜீவனோபாயத்திற்காக எத்தனையோ வேலைகள் உள்ளன. அவற்றில் மூழ்கியமனம், புலன்கள் வழியே சென்று, அந்தக்கரணத்திற்கப்பால் உள்ள பரமசுகப்பொருளை மறந்து போகிறது; 'நான்' என்னும் உணர்வால்அனைத்தையும் தாறுமாறாகச்செய்து அல்லற்படுகிறது. அல்லல் பெருகும்போது "சிவனே, நாராயணா, கண்ணா முருகா என்கவலை தீராயோ" என்று ஏதாயினும் ஒரு தெய்வப்பெயரைச் சொல்லி முறையிடுகிறது. இந்த முறையீட்டை நித்திய கர்மானுட்டானமாக்க வேண்டும். காலையும், மாலையும், அவரவர் கொள்கைக்கேற்ற ஆசார நியமங்களுடன் கால்

மணி நேரமாவது, சித்தத்தை அலைய விடாமல் உயிருக்கு இறைவனாகிய, உலகநாதனாகிய, நமது அந்தர்யாமியாகிய, இறைவனைச் சிந்திக்க வேண்டும். அத்தகைய சிவ சிந்தனையை இதோ இப்போதே செய்வோம்.

## 14. சிவசிந்தனை.

[எல்லோரும் இன்பம் வேண்டுகின்றனர். மாசற்ற முற்றின்பமே சிவம். "சிவம், சிவம்" என்று எப்போதும் நினைத்தால் உள்ளும் புறமும் பேரின்பம் பொங்கும். காலை மாலை சிவ சிந்தனையில் மனம் ஈடுபட்டிருக்க இந்தப்பாடல் ஒரு பயிற்சி யளிக்கும். சிவாத்துவிதப் பொருள் இதில் அடங்கும். இதை ஆரபியிற் பாடுக.]

சிவசிவ, சிவவெனச் சிந்தைசெய் மனமே;
சிவமயங் காணாய் சீவரு ளெல்லாம்.
தோன்றிய உலகெலாந் தோற்றிய முதல்வன்,
ஈன்றளித் தருளால், இன்னுயிர்க் குயிராய்
அணுவினு மணுவா யவனியிற் பெரிதாய்
குணு * முத விமையவர் குழுவரை யெங்கும்
அவனவ ளவையெனு மனைத்துந் தானாய்
எவற்றிலுந் தாக்கற் றிருந்தவா றிருக்கும்,
தற்பரம் பொருளைத் தரணியாய் விரிந்த
சிற்பரஞ் சுடரைச் சிந்தைசெய் மனமே!
அவனரு ளின்றி யாது மிங்கில்லை;
அவன்விளை யாட்டே யகிலவாழ் வெல்லாம்;
"இதயமா மன்றில் இருக்கிறேன் காண்" எனப்
பொதுநடம் புரியும் புண்ணியன் அவனே!

---

* புழு

அன்பைப் பெருக்கி ஆணவம் சுருக்கி,
இன்பக் கடவுளோ டிரண்டறக் கலத்தலே
வாழ்வின் பயனென வகுத்தனர் மேலோர்.
சூழ்வினைக் கட்டறச் சுதந்திரம் பெறவும்,
கவலை நெஞ்சக் கல்லைக் கரைக்கவும்,
அவமய மாய மனத்திரை யடங்கிப்
படிகம் போன்றுட் பரமனைக் காட்டவும்,
பிடிவிடா தவனடி பேணுவாய் மனமே!
திருவடி மலரிற் செழுந்தே னுண்ணாய்;
மருட்குல நீங்குங் கருக்கணக் கொழியும்.
கண்விழிக் கவனே கதிரென் றறிவாய்!
பூணுடற் கவனைப் பூதமென் றுணர்வாய்!
உயிருக் கவனே யுயிர்ப்பெனக் காணாய்!
வயிற்றிற் சீரணி வன்னியு மவனே!
ஓடு நாடியி லுணர்ச்சியு மவனே!
ஆடுஞ் சீவரை ஆட்டுவோ னவனே
அருவே யானோன், அருளுருக் கொண்டு,
குருவே யாகவும், குணங்குறி யின்றியும்,
முன்னே வந்தும், பின்னே மறைந்தும்,
தன்னையே கூவுந் தமியரைக் காப்பான்,
எவ்வடி வினிலே யெங்கெவர் வழுத்தினும்
அவ்வடி வினிலே யாங்கவர்க் கருள்வான்!
முறையிடு மனமே, முறையிடு மனமே
முறையிட் டவனுள் உறைவாய் மனமே!

“ இறைவா போற்றி, யென்னவா போற்றி,
மறைமுடி காணா வாய்மையே போற்றி!
உன்னை யன்றிப் பின்னெது மில்லை:
மன்னனு நீயே; மக்களு நீயே;
உள்ளு நீயே; யுலகெலா நீயே!
கள்ளார் மலரின் கவின்மண நீயே!
அப்பனு மன்னையு மொப்பறு நட்பும்
முப்பெரு முலக முற்றிலு நீயே!
பெரிதிற் பெரிய பெரியனு நீயே!
சிறிதிற் சிறிய சிறியனே னுன்றன்
பதமலால் வேறு கதியிலேன் ஏழை....
துதித்துத் தொண்டுசெய் மதியெனக்கருளாய்!
பணியும் பத்தியும் பனுவலுன் னருளால்
அணிந்தசொற் கோவின் அன்பெனக் கீவாய்!
பந்தத் தளையறப் பரிந்துமுன் வந்து,
சுந்தரத் தோழனைத் தொண்டுகொண் டதுபோல்,
வினைவழி வருந்தும் எனைத்தடுத் தாண்டுனை
நினைவழி செலுத்தி நின்னடி சேர்ப்பாய்!
*பாலறா வாயர் பைந்தமிழ்ப் பண்ணால்,
ஆலவாய்† தன்னில் அற்புதம் புரிந்து,
சமயமுந் தமிழுந் தழைத்திடச் செய்தாய்!
இமயமீ தேறி யிளைத்தவா கீசர்
கைலை ஐயாற்றிற் கண்டிடச் செய்து,

† மதுரை *பாலறாவாயர் = ஞானசம்பந்தர்

வையக மெல்லாந் தையலோ டமர்ந்த
வாய்மை காட்டினை; வரதநான் காணத்
தூய்மையும் உன்னருட் சுடருமெற் கருளாய்!
குருந்தின் கீழே குருவாய் யிருந்து,
மருந்தென வுதவியோர் மந்திர மணியை,
வாதவூ ரடிகளை மணிவாக் கமுதால்
ஓதியுன் புகழை யுய்திடச் செய்தாய்!
அன்பனுக் கேபிரம் படியும் வாங்கினாய்!
அன்ப ரருந்தமிழ் அமுதென வுவந்து,
திருச்சிற் றம்பலம் விருத்தனாய் வந்து,
திருவா சகத்தைத் தீட்டி யருளினை!
அப்பனே யுன்ற னற்புத மறிந்தேன்.
ஒப்பறு முன்கழ லொன்றே பற்றி,
சாற்றுவ துன்னையென் சரியை கிரியை;
போற்றுவ துன்னையென் பொய்யறு யோகம்;
அனைத்துநீ யென்பதென் அளப்பறு ஞானம்!
இனைத்துணை யேனுன் சேவடிக் காளாய்
உய்யக் கருதி யுருகிநிற் கின்றேன்!
பையக் கொண்டென் பாசம் போக்கி,
இருவினைக் கட்டற இருளழுக் ககற்றி,
வருவினை மாற்றி, வரவினி யின்றியுன்
அருட்கடல் விரிவில் ஆறெனச் சேர்த்து,
மருட்பிறப் பின்றியுன் மாசறுஞ் சுடரின்
காந்தியிற் கரைத்துக் கற்பூ ரம்போல்,

சாந்தனை யென்னை யிழுத்துனுட் கலப்பாய்!
அகமெலா மடங்கிச் சகமுறி யாத,
சுகநிலை தருவாய் தூயனே போற்றி!
பூவடி மௌனத் தாழ்ந்தசற் குருவே
காலடி நின்றன் கருணையை வேண்டினேன்!
ஆரனே, திருச்சிற் றம்பலக் கூத்தா,
பரனே கங்கா தரனே போற்றி!
வஞ்சக நமனை அஞ்சிட வுதைத்தாய்!
நஞ்சினை யமுதென நயந்துவா னவரைக்
காத்தனை; நெஞ்சக் கவலை தீர்ப்பாய்!
பூத்த மலரின் புன்னகை நீயே;
வான்வளிந் தணியும் வையக நீயே;
ஊனுயிர்க் கோயிலுள் ஞான நடஞ்செய்
பொதுநிலைப் பொருளே, போற்றி, போற்றி!
ஆர்கலி முழங்கும் அரசே போற்றி!
போர்வடி வடங்காப் பெருமையே போற்றி!
இயற்கையி னுள்ளே இலங்கிடும் அழகா!
சயசய போற்றி, சயசய போற்றி,
இன்பப் பிழம்பே, யின்னறி வொளியே,
அன்புவா னமுதே யடியார்க் கெளியா,
பவவினை தீர்க்கும் பசுபதி போற்றி,
சிவசிவ சிவவெனச் சிந்தைசெய் மனமே!

ஓம் சிவம்.

அருட்செல்வமோங்கி அனைத்தும் வாழ்க!